بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 27/06/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**மக்கா வெற்றி போரின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் சஹாபா பெருமக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) உடன் மக்காவில் நுழைந்தது மற்றும் அபூ சுஃப்யான் இஸ்லாத்தை ஏற்றது பற்றிய எடுத்துரைப்பு**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் படையுடன் சப்தமின்றி மக்காவுக்கு அருகில் சென்றடைந்தது, முகாமிட்டது பற்றி கூறப்பட்டு வந்தது. ஹுஸூர் (ஸல்) அவர்கள் 10,000 இடங்களில் நெருப்புகளை மூட்டச் செய்தார்கள். அபூ சுஃப்யானும், அவருடன் வந்தவர்களும் இதைப் பார்த்து மிகவும் பதற்றமடைந்தனர். இதன் சிறிது விபரம் முன்னர் எடுத்துக் கூறப்பட்டிருந்தது. இது குறித்த மேற்கொண்ட விபரத்தை எடுத்துரைக்கிறேன்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இதன் விபரத்தை ஓரிடத்தில் இவ்வாறு எடுத்துக் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அபூ சுஃப்யானின் பழைய நண்பராக இருந்ததனால், அவர்கள் அவரை மாநபி (ஸல்) அவர்களின் அவைக்கு அழைத்துச் செல்ல இணங்க வைத்தார்கள். தம்முடன் ஒட்டகத்தில் அமர வைத்துக் கொண்டு பெருமானார் (ஸல்) அவர்களின் சபையில் கொண்டு சேர்த்தார்கள். அபூ சுஃப்யான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அருகில் சென்றடைந்தார். அவர் இஸ்லாமிய படையின் மேன்மை, கம்பீரம் மற்றும் ஒழுங்குமுறை ஆகியவற்றைப் பார்த்து வியப்பிலும் அச்சத்திலும் ஆழ்ந்து விட்டார். அவரிடம் பெரும் மனமாற்றம் ஏற்பட்டிருந்தது. ஏனெனில், இப்பொழுது அவர், ஏழு ஆண்டுகளுக்கு முன்பு மாநபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து வெளியேற்றப்பட்ட அந்த நாளை நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். இன்று அதே இறைதூதர் (ஸல்) அவர்கள் 10,000 படைவீரர்களுடன் எவ்வித அநீதியிழைக்காமலும், வரம்புமீறாமலும் திரும்பி வந்து விட்டார்கள்.

அபூ சுஃப்யானின் நிலையைக் கண்ட பெருமானார் (ஸல்) அவர்கள், 'அவர் நிலைமைகளைத் தானே பார்த்து புரிந்து கொள்ளும் பொருட்டு அவரை இரவில் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களுடன் இருக்க விடலாம்' என்று கூறினார்கள். ஃபஜ்ர் நேரம் வந்ததும், அபூ சுஃப்யான் முஸ்லிம்கள் உளூ செய்வதையும், ஸஃப்புகள் அமைத்து நிற்பதையும், தொழுவதையும் பார்த்தார்.

இது ஏதோ புதிய தண்டனை போலும் என நினைத்து பதறிப் போனார். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அவருக்கு இதுதான் தொழுகை என்று கூறினார்கள். தொழுகையின்போது, ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் ருகூவும் சஜ்தாவும் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தபோது அவர் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களிடம், 'நான் (பேரரசர்) கிஸ்ரா மற்றும் (பேரரசர்) சீஸர் ஆகியோரின் அரசவைகளையும் பார்த்திருக்கிறேன். ஆனால், முஹம்மத் ரஸூலுல்லாஹ் {(ஸல்)} அவர்களுடன் இருப்பது போன்ற இந்த அளவுக்கு நன்றியுணர்வுள்ள ஒரு சமுதாயத்தைக் கண்டதில்லை' என்று கூறினார்.

பிறகு, ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், 'இப்பொழுது நீ ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் பரிவுகூர்ந்து மன்னித்து விட்டுவிடுமாறு கேட்டுக் கொள்' என்று கூறினார்கள். தொழுகை முடிந்ததும் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அபூ சுஃப்யானை ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான அவைக்கு அழைத்துச் சென்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அபூ சுஃப்யானிடம் தவ்ஹீது (ஏகத்துவம்) மற்றும் ரிஸாலத் (தூதுத்துவம்) மீது ஈமான் கொள்வது பற்றி கேட்டார்கள். அபூ சுஃப்யான் தவ்ஹீதையோ ஏற்றுக் கொண்டார். ஆனால், ரிஸாலத் தொடர்பாக சற்று தயக்கத்தை வெளிப்படுத்தினார். ஆனால், அவருடன் வந்திருந்த ஹக்கீம் பின் ஹிஸ்ஸாமும், இன்னொரு நபரும் முஸ்லிமாகி விட்டனர். பின்னர் அபூசுஃப்யானும் இஸ்லாத்தை ஏற்றார். ஆனால், மக்கா வெற்றிக்குப் பிறகே அவரது மனம் முழுமையாகத் திறந்தது.

ஹக்கீம் பின் ஹிஸ்ஸாம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், 'இந்தப் படை தம் சமுதாயத்தையே அழிப்பதற்காக வந்திருக்கிறதா?' என்று கேட்டார். அதற்கு விளக்கம் அளித்தவாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'மக்கத்தினர் அநீதியிழைத்தனர்; உடன்படிக்கையை மீறினர்; மேலும், புனித இடத்தில் இரத்தம் சிந்தச் செய்தனர். எனவே, இந்த நடவடிக்கை தவிர்க்க முடியாததாகும்' என்று கூறினார்கள். பிறகும்கூட, பெருமானார் (ஸல்) அவர்கள், 'எந்த மக்கள் வாள் ஏந்த மாட்டார்களோ, அல்லது வீடுகளில் பத்திரமாக இருந்து கொள்வார்களோ, அல்லது அபூ சுஃப்யான் வீட்டிலோ, ஹக்கீம் பின் ஹிஸ்ஸாம் வீட்டிலோ அல்லது புனித பள்ளிவாசலிலோ தஞ்சமடைகிறார்களோ அவர்களுக்கு உயிருக்கு உத்திரவாதம் வழங்கப்படும்' என்று தெளிவுபடுத்தினார்கள்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அபூ சுஃப்யானின் இஸ்லாத்தை ஏற்றல் தற்போது பலவீனமானதாக இருப்பதாக அச்சத்தை வெளிப்படுத்தினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'அவர் இஸ்லாமிய படையைத் தன் கண்களால் காணும் பொருட்டு அவரைத் தடுத்து நிறுத்திக் கொள்ளுங்கள்' என்று கூறினார்கள். எனவே, ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அபூ சுஃப்யானை ஒரு புதர் பகுதியில் தடுத்து நிறுத்தி விட்டார்கள். அந்தப் பக்கமாக கோத்திரங்களின் படைகள் கடந்து சென்றன. அபூ சுஃப்யான் இஸ்லாமிய படையின் கம்பீரமான ஆற்றலைப் பார்த்தார்.

அன்ஸாரிகளின் படைக்குழுவின் தலைவரான ஹஸ்ரத் சஃது பின் உபாதா (ரலி) அவர்கள் உத்வேகத்தில், ‘இன்று போருக்கான நாளாகும். இன்று கஅபாவின் கண்ணியம் எஞ்சியிருக்காது’ என்று கூறினார்கள். இதைக் கேட்ட அபூ சுஃப்யான் இந்த நாள் அழிவுக்கான நாளாக இருக்கலாம் என விமர்சித்தார். பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் தாமும் ஒரு படையுடன் வருகை தந்தார்கள். அதன் கொடி ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்களிடம் இருந்தது.

மற்றோர் அறிவிப்பிற்கேற்ப, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அபூ சுஃப்யானைக் கடந்து சென்றபோது அவர், ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! {(ஸல்)} தாங்கள் தங்களது சமுதாயத்தைப் படுகொலை செய்வதற்கான கட்டளை பிறப்பித்து விட்டீர்களா? சஃது பின் உபாதா இப்படியெல்லாம் கூறிக் கொண்டிருந்தார் என்பது தங்களுக்குத் தெரியாதா? நான் தங்களுக்கு தங்களது சமுதாயம் குறித்து அல்லாஹ்வுக்காகக் கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் எல்லா மக்களையும் விடத் தூய்மையானவரும், உறவுகளைப் பேணுபவரும், கருணை புரிபவரும் ஆவீர்கள்’ என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ‘சஃது தவறாகக் கூறியுள்ளார். இன்றைய நாளோ கருணைக்கான நாளாகும். இன்று அல்லாஹ் கஅபாவுக்கு கண்ணியம் வழங்கிடுவான். மேலும், அல்லாஹ் குறைஷியர்களுக்கு உண்மையான கண்ணியத்தை வழங்கிடுவான்’ என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சஃது (ரலி) அவர்களை நோக்கி செய்தி அனுப்பினார்கள். அவர்களிடமிருந்து கொடியை வாங்கி, அவர்களின் மகன் கைஸுக்கு வழங்கி விட்டார்கள். இதைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: இவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்கள் மக்கத்தினரின் உணர்வுகளையும் கருத்தில் கொண்டார்கள்; அன்ஸாரிகளின் உள்ளங்களுக்கும் பெருந்துயரம் ஏற்படுவதை விட்டும் பாதுகாத்து வைத்தார்கள். மேலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் கைஸ் (ரலி) அவர்கள் மீது முழு நம்பிக்கையும் இருந்தது. ஏனெனில், ஹஸ்ரத் கைஸ் (ரலி) அவர்கள் மிகவும் ஒழுக்கமான இயல்பைக் கொண்ட இளைஞராக இருந்தார்கள்.

இப்னு அபீ ஷீபா அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், ‘யா ரஸூலல்லாஹ் {(ஸல்)} தாங்கள் எனக்கு அனுமதி அளித்தால் நான் மக்கத்தினரிடம் செல்கிறேன். அவர்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். தாங்கள் அவர்களுக்கு உயிருக்கு உத்திரவாதம் வழங்கிடுங்கள்’ என்று கேட்டுக் கொண்டார்கள். ஆக, அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஷஅபா எனும் வெள்ளை நிறக் கோவேறு கழுதையின் மீது ஏறி புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் மக்காவில் நுழைந்தார்கள். அவர்கள், ‘மக்கத்தினரே! இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். ஈடேற்றம் அடைவீர்கள். உங்களிடம் எவ்வளவு பெரிய படை வந்துள்ளது என்றால், அதை எதிர்ப்பதற்கு உங்களிடம் ஆற்றல் இல்லை’ என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஹூத் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்: அபூ சுஃப்யான் நான் மக்கத்து மக்களின் ஈடேற்றத்துக்கான வழியை உண்டாக்கி விட்டேன் என்று தனது மனதில் மகிழ்ச்சியாக இருந்தார். இஸ்லாத்தின் துவக்கத்திலிருந்தே முஸ்லிம்களிடம் உள்ளப்பகைமையும் வன்மத்தையும் கொண்டிருக்குமாறு மக்களுக்குப் போதித்து வந்த அவரது மனைவி ஹிந்தஹ் காஃபிராக இருந்தும் உண்மையில், ஒரு வீரமான பெண்மணியாக இருந்தார். அந்த ஹிந்தஹ் முன்னால் வந்து தன் கணவனின் தாடியைப் பிடித்துக் கொண்டு, “வாருங்கள்! இந்த முட்டாள் கிழவனைக் கொன்று விடுங்கள். இவர் உங்களுக்கு, ‘செல்லுங்கள்! உங்களுடைய உயிர்களுக்காக, உங்களது நகரத்தின் கண்ணியத்துக்காக சண்டையிட்டவாறு கொல்லப்படுங்கள்’ என்று அறிவுரை கூறுவதற்கு பதிலாக, உங்களிடையே உயிருக்கு உத்திரவாதம் பற்றி அறிவிப்பு செய்கிறார்’’ என்று மக்கத்தினருக்குக் குரல் கொடுக்கத் துவங்கி விட்டார். அபூ சுஃப்யான் அவரது செயலைக் கண்டு, ‘முட்டாளே! இது இந்த விஷயங்களைப் பேசுவதற்கான நேரம் இல்லை. போ, போய் உனது வீட்டில் ஒளிந்து கொள். நான் எத்தகைய படையைப் பார்த்து வந்துள்ளேன் என்றால், அந்தப் படையை எதிர்ப்பதற்கான ஆற்றல் முழு அரேபியாவிலும் இல்லை’ என்று கூறினார்.

இஸ்லாமிய படை மக்காவில் நுழைந்தது பற்றிய நிகழ்வு புகாரீயில் எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் உர்வா அவர்கள் அறிவிக்கிறார்கள்: அன்னார் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களுக்கு, ‘மக்காவின் மேற்பகுதியான கதாவிலிருந்து நுழைந்து விடுங்கள். உங்களது கொடியை ஹுஜூன் பகுதியில் நட்டு விடுங்கள். மேலும், நான் வரும்வரை இடத்தை விடாதீர்கள்’ என்று கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் படையின் வலது பகுதியில் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களது படைக்குழுவில் அஸ்லம், சுலைம், கிஃப்ஃபார், முஸைனா மற்றும் ஜுஹைனா ஆகிய கோத்திரங்கள் இருந்தன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு கண்ணியத்திற்குரிய மக்காவின் தாழ்வுப் பகுதியிலிருந்து நுழையுமாறு கட்டளையிட்டார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு பக்கத்திலுள்ள வீடுகளுக்கு அருகில் கொடியை நடுமாறு ஆணையிட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்களைக் காலாட்படைக்கு நியமித்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம் அமீர்மார்களுக்கு, அவர்கள் எல்லாரும் போர் புரிவதை விட்டும் தம்முடைய கைகளைத் தடுத்து வைக்குமாறும், அவர்களுடன் சண்டையிடுபவருடன் மட்டும் சண்டையிட வேண்டும் என்றும் ஆணையிட்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்காவில் நுழையவிருந்தபோது, சஃப்வான், இக்ரிமா மற்றும் சுஹைல் போன்ற மக்காவின் முன்னணித் தலைவர்கள் சிலர் முஸ்லிம்களுடன் போரிட ஆயத்தம் செய்தார்கள். ஃஹந்தமா எனும் இடத்தில் குறைஷியர்கள், பனூபக்ர் கோத்திரத்தினர் மற்றும் ஹுஸீல் கோத்திரத்தினர் ஆகியோரை ஒன்று திரட்டினார்கள். அவர்கள் முஹம்மத் {(ஸல்)} அவர்கள் ஆற்றலால் மக்காவில் நுழைய முடியாது என்று சத்தியங்கள்

செய்து கொண்டிருந்தார்கள். பனூ பக்ரின் ஒரு நபர் ஜிமாஷ் பின் கைஸும் மிகவும் ஆணவத்துடன் ஆயத்தமானார். ஆனால், அவர் மனைவி, ‘முஹம்மத் {(ஸல்)} அவர்களை எதிர்க்க முடியாது’ என்று எச்சரித்தார். பிறகும் அந்த நபர் ஃஹந்தமாவுக்குச் சென்றார்.

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் படை அங்கிருந்து மக்காவுக்குள் நுழைய முயற்சி செய்தபோது, அந்த இணைவைப்பாளர்கள் எதிர்த்தனர்; போர் வந்து விட்டது. அதன் விளைவாக பனூபக்ரின் 20 பேரும், ஹஸீலின் மூன்று அல்லது நான்கு பேரும் கொல்லப்பட்டார்கள். எதிரிகளுக்கு படுதோல்வி ஏற்பட்டது. அவர்கள் எல்லாப் பக்கமும் சிதறிப் போய் விட்டார்கள். ஜிமாஷ் பின் கைஸும் களத்தை விட்டுவிட்டு ஓடி வீட்டுக்குச் சென்று சேர்ந்தார். மேலும், தன் மனைவியிடம், ‘கதவை மூடு’ என்று கூறினார். மனைவி அவரைக் கேலி செய்தார். அப்பொழுது ஜிமாஷ் வெட்கப்பட்டு கவிதைகள் கூறினார். அவற்றின் பொருள்: அவள் ஃஹந்தமாவின் போரை நேரில் பார்த்திருந்தால், சஃப்வான், இக்ரிமா ஆகிய அனைவரும் ஓடிப் போய் விட்டனர் என்பதையும், வாள்கள் அவர்களுடைய தலைகள் மீது பொழிந்து கொண்டிருந்தன என்பதையும் அவள் அறிந்து கொண்டிருப்பாள் என்பதாகும்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் குதிரை வீரர்களில் இருவர் கொல்லப்பட்டதாக புகாரீயில் உள்ளது. மக்கத்தினர் உயிருக்கு உத்திரவாதம் பெற்றுக் கொண்டிருக்கும்போது, இத்தகைய தருணத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் உயிரை மாய்த்துக் கொள்ளும் தம் பேரன்பர்களான நன்றியுணர்வுள்ள தோழர்களை மறந்து விடவில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு நிச்சயமாக சில ஆண்டுகளுக்கு முன்னால் மக்காவின் வீதிகளில் செய்யப்பட்ட அநீதியும், அக்கிரமமும்கூட நினைவுக்கு வந்து கொண்டே இருந்திருக்கும். அந்த பிலாலும் நினைவுக்கு வந்திருப்பார்கள். அவர்களைக் கயிறுகளால் கட்டிப் போட்டு இங்கு இதே கற்கள் நிறைந்த வீதிகளில் தரதரவென இழுக்கப்பட்டது. இன்று அந்த பிலால் (ரலி) அவர்களும் அந்த வெற்றிப் படையில் ஒருவராக இருந்தார்கள். அவர்களுடைய சிந்தனையிலும் இழைக்கப்பட்ட அநீதி, அக்கிரமத்தின் எல்லாக் காட்சிகளும் புத்துணர்வு பெற்றிருக்கும். ஹுஸூர் (ஸல்) அவர்கள் அதற்குப் பழிவாங்குவதையும் அவசியமெனக் கருதினார்கள். மேலும், பெருமானார் (ஸல்) அவர்கள் எவ்வளவு அழகாகப் பழிவாங்கினார்கள்!

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: மக்கா வெற்றியின்போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் சகோதரர் அபீ ரவீஹா (ரலி) அவர்களுக்குக் கொடியை வழங்கினார்கள். மேலும், எவர் இந்தக் கொடியின் கீழ் வந்துவிடுவாரோ அவருக்கு உயிருக்கு உத்திரவாதம் வழங்கப்படும் என்று அறிவிக்கச் செய்தார்கள். அத்துடன் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுக்கு அவர்களே மக்காவின் வீதிகளில் சென்று இவ்வாறு அறிவிக்குமாறு ஆணையிட்டார்கள். இந்த நடவடிக்கை ஓர் ஆழமான நுட்பத்தையும், உயர்ந்த இஸ்லாமிய நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தக்கூடியதாகவும் இருந்தது.

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் மக்காவின் இதே வீதிகளில் அநீதி, அக்கிரமத்துக் இலக்காக்கப்பட்ட அதே நபர்தான். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாளால் பழிவாங்கவில்லை. மாறாக, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை உயிருக்கு உத்திரவாதம் வழங்குவதற்கான அறிவிப்பு செய்வதற்காக பிரதிநிதியாக நியமித்து விட்டார்கள். இந்த செயலால் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் உள்ளத்திலிருந்து பழிவாங்கும் நெருப்பு அன்பாகவும், மகத்துவமாகவும் மாறி விட்டது.

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், 'ஒரு காலத்தில் அடிமையாக இருந்து, இழிவுக்கான இலக்காக ஆகிக் கொண்டிருந்த நான் இன்று இதே மக்களுக்கு உயிருக்கு உத்திரவாதம் வழங்குகிறேனே!' என்று அந்தத் தருணத்தில் உணர்ந்திருப்பார்கள். இந்தப் பழிவாங்குதல் ஹஸ்ரத் யூஸுஃப் (அலை) அவர்களின் பழிவாங்குதலைக் காட்டிலும் மிகவும் மேன்மைமிக்கதாக இருந்தது. ஏனெனில், ஹஸ்ரத் யூஸுஃப் (அலை) அவர்கள் தம் சகோதரர்களை மன்னித்தார்கள். ஆனால், ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம் சமுதாயத்தை ஓர் அடிமையின் மூலமாக மன்னித்தார்கள். இந்த செயல் இஸ்லாமிய நீதிக்கும், கருணைக்கும் உயரிய முன்மாதிரியாக இருந்தது மட்டுமின்றி, அதற்கும் மேற்பட்டு, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் போன்ற பலவீனமான, அநீதுள்ளான நபருக்கு நிகரற்ற கண்ணியம் அளித்தலால் உலக வரலாற்றில் எப்பொழுதும் நினைவிற் கொள்ளப்படும்.

*இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* ஆக, இதுதான் நம் எஜமானரும் தலைவருமான ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பழிவாங்குதலின் அழகிய முன்மாதிரியாகும்.

## அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் வபாரிக் வஸல்லிம் இன்னக ஹமீதும் மஜீத்.

இது மக்காவில் நுழைந்தது பற்றிய துவக்க எடுத்துரைப்பாக இருந்தது. இது இனியும் எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்..) லாஹூரைச் சேர்ந்த மதிப்பிற்குரிய இன்ஆமுல்லாஹ் சாஹிப் அவர்களின் துணைவியார் **மதிப்பிற்குரிய அமீனா ஷஹ்னாஸ் சாஹிபா** அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்து தொழுகைக்குப் பிறகு அவர்களுக்கு ஜனாஸா தொழுகை தொழவைப்பதாகவும் அறிவிப்பு செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**